Ban on the export of gur and khandsari sugar

***142. *Q*—THIRUVALARGAL N. R. THIAGARAJAN AND K. RAMADASS: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—**

(*a*) whether the State Government requested the Union Government to permit the ban on the export of gur and kandsari to other States from Tamil Nad ;

(*b*) if so, the reply sent by the Central Government ; and

(*c*) when this ban will come into force ?

வெல்லம், நாட்டுச் சர்க்கரை

திருவாளர்கள் என். ஆர். தியாகராஜன், கே. ராமதாஸ் : மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்திலிருந்து வெல்லம், நாட்டுச் சர்க்கரை ஆகியவற்றை வெளிமாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்வதைத் தடைசெய்ய மத்திய சர்க்கார் அனுமதியை தமிழக சர்க்கார் கேட்டதா?

(இ) ஆமெனில், மத்திய சர்க்காரின் பதில் என்ன?

(உ) எப்பொழுதிலிருந்து இத்தடை அமுலுக்கு வரும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) வெல்லம், நாட்டுச் சர்க்கரை (**khandsari**) இவற்றின் விலைகள் ஏற்கனவே இறங்கியிருப்பதால், இன்னும் சற்று காலத்திற்கு நிலைமையைக் கூர்ந்து கவனிக்கலாமென இந்திய அரசு கருத்து தெரிவித்துள்ளது.

(உ) இவ்வினா எழவில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, தமிழகத்திலிருந்து வெல்லம், நாட்டுச் சர்க்கரை, வெளி ராஜ்யங்களுக்கு போகக்கூடாது என்று தடை போடுவது ரெயில் மூலமாகவா, லாரி மூலமாகவா அல்லது தலைச் சுமை மூலமாகவா? ரெயில் மூலமாகச் செல்வதை எப்படி தடை செய்யப் போகிறார்கள்.?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவரவர்களே, இது சம்பந்தமாக ஒரு வழக்கு உயர் நீதி மன்றத்தில் இருப்பதால் இதைப் பற்றி மேற்கொண்டு கேள்விகள் கேட்கவேண்டாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

Sale of fish

***143 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—**

(*a*) the places in Tamil Nad where fish is sold by the Fisheries Department ;

(*b*) the price at which fish is sold ; and

(*c*) whether fish is sold only to the customers ?

மீன் விற்பனை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மீன் இலாகாவினரால் தமிழகத்தில் எங்கெங்கு மீன் விற்பனை செய்யப்படுகின்றது?

1st March 1968]

(இ) மீன்கள் என்ன விலைக்கு விற்கப்படுகின்றன?

(உ) வாடிக்கையாக வாங்குபவர்களுக்கு மட்டும்தான் விற்பனை செய்யப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) இம்மாநிலத்தில் மீன் துறை மூலம் கீழ்க்கண்ட நீர்த்தேக்க இடங்களிலும் ஏனைய இடங்களிலும் விற்கப்படுகின்றன.

பவானிசாகர், அமராவதி, மேட்டூர் அணை, கிருஷ்ணகிரி, சாத்தனூர், வைகை, பேச்சிபாறை, பெருஞ்சாணி, மணிமுத்தாறு, பூண்டி, உதகை, வேலூர், லால்பேட்டை, சென்னையில் அடையாறு, தஞ்சாவூர், கோட்டை அகழி, மதுரை, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஹோப் ஏரி ஆகிய இடங்களிலுள்ள மீன் பண்ணைகள்.

(இ) விற்கப்படும் மீனின் அடக்கவிலையைக் காட்டும் ஒரு விவர அறிக்கை* கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் 14 மாவட்டங்களிலும் உள்ள மீன்கள் பற்றி குறிக்கப்பட்டிருக்கிறது, அது முழுமையும் அங்கத்தினர்கள் படிக்கவேண்டுமென்று விரும்பினுல் தலைவரவர்களின் முடிவுப்படி படிக்கிறேன்.

(உ) இல்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, வைகை அணைக் கட்டில் மீன் வாங்குவதற்கு தனியார்கள் சென்றால் அவர்களுக்கு மீன் கிடைப்பதில்லை. வழக்கமாக வாங்குபவர்களுக்குத்தான் கொடுப்பதாக ஒரு புகார் இருக்கிறது. ஆகவே யார் வந்து கேட்டாலும் மீன்கள் கொடுப்ப தற்கு அரசாங்கம் உத்தரவு போடுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் உறுப்பினர் அவர்கள் வைகை அணைக்கட்டு பற்றி அதிக அக்கறை உள்ளவர் என்று தெரியும். அங்கே எல்லோருக்கும் மீன்கள் கொடுக்கப்படுகிறது. உள்ளூரிலும் கொடுக்கப்படுகிறது. வழக்கமாக வாங்குபவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டு மென்ற நிலைமை கிடையாது. எந்த அதிகாரியாவது அப்படி செய்கிறார்கள் என்று குறிப்பிட்டுச் சொன்னால் தகவல் கொடுத்தால் அது பற்றி விசாரித்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவரவர்களே, காஞ்சிபுரத்திற்கு அருகில் பொன்னேரியில் மீன்கள் வாங்குவாரற்று கிடக்கிறது. அதைச் சர்க்கார் வாங்குமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அந்த மீனை சென்னைக்கு கொண்டுவந்து விற்கப்படும். அதைச் சர்க்கார் வாங்கி சாப்பிடுவதற்கு இல்லை. அதைப் பொதுமக்களுக்குத்தான் கொண்டுபோய் கொடுக்க முடியும். அதை சர்க்கார் வாங்கவேண்டுமென்ற கனம் அங்கத்தினரின் யோசனை சரியானதல்ல.

திரு. எம். எத்திராஜுலு : தலைவரவர்களே, மீன்கள், குறிப்பாக "எரா" தமிழ்நாட்டில் ஏராளமாக கிடைக்கிறது. அதை கேரளாவிலிருந்து வாங்கி கொச்சின் துறைமுகத்திற்கு கொண்டு சென்று அங்கிருந்து அமெரிக்கா போன்ற தேசங்களுக்கு அனுப்புகிறார்கள். அம்மாதிரி கேரளாவிற்கு விற்காமல் தமிழ்நாட்டு அரசாங்கமே அந்த "எராக்களை" வாங்கி வெளி நாடுகளுக்கு அனுப்புவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : சென்னையிலும், கடலூர், பறங்கிப்பேட்டை ஆகிய இடங்களிலும் எல்லாம் எரா ஏராளமாக கிடைக்கிறது. கிட்டத்தட்ட 2 கோடிக்கு மேல் இங்கிருந்து கொச்சிக்கு சென்று அங்கிருந்து வெளி நாடுகளுக்கு, ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடு களுக்கு அனுப்பப்படுகிறது. ஆகவே நேரடியாக கொச்சி பகுதிகளுக்குச் சென்று எரா விஷயத்தில் அவர்கள் எப்படி செய்கிறார்கள், எப்படி பயன் படுத்துகிறார்கள் என்பதை எல்லாம் பார்த்து, எண்ணூரில் இந்த

* Printed as Appendix on page 53

தொழிற்சாலை அமைக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. இத்தகைய தொழிற்சாலை எண்ணூரில் விரைவில் ஆரம்பிக்கப்படும். நேரடியாக ஜப்பானுக்கும் அமெரிக்காவிற்கும், மற்ற வெளிநாடுகளுக்கும் அனுப்புகிற நிலைமை விரைவில் ஏற்படும்.

திரு. எம். அய்யாசாமி : தலைவரவர்களே, எண்ணூரில் ஆரம்பிக்க இருக்கிற இந்த தொழிற்சாலை அரசாங்க சார்பில் நடத்தப்படுமா? அல்லது தனியார் துறையில் நடத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தனியார் துறையில்தான்.

MR CHAIRMAN : Question No. 144 is postponed.

Fort St. George Gazette

***145. Q.—THIRU N. R. THIAGARAJAN** . Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether all parts of the Fort St. George Gazette are published in English and Tamil ; and

(*b*) if all the parts of the Fort St. George Gazette are not published in Tamil, whether there is any proposal to publish them in Tamil also ?

மாநில அரசிதழ்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநில அரசிதழின் எல்லாப் பகுதிகளும் ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளியிடப்படுகிறதா?

(இ) தமிழில் மாநில அரசிதழின் எல்லாப் பகுதிகளும் வெளியிடப் படவில்லையென்றால், அப்பகுதிகளை தமிழில் வெளியிடும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) தமிழ் நாட்டின் அரசிதழின் எல்லா பாகங்களும் ஆங்கிலத்தில் வெளியிடப் படுகின்றன. தவிர, தமிழ்நாட்டு அரசிதழின் இரண்டாம் பாகத்தின் 1-வது, 2-வது பிரிவுகளுக்கும், மூன்றும் பாகத்திற்கும், நான்காம் பாகத்தின் 1-வது 3-வது 4-வது பிரிவுகளுக்கும், ஐந்தாம் பாகத்துக்கும் தேவையான போதெல்லாம் இணைப்புகள் தமிழில் வெளியிடப்பட்டு வருகின்றன.

(ஆ) மாநில அரசிதழின் எல்லாப் பகுதிகளையும் தமிழில் வெளியிடும் செயற்குறிப்பு எதும் தற்போது இல்லை.

Construction of houses for Harijans.

***146 Q.—THIRU N. R. THIAGARAJAN** : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have proposed to construct houses at a cost of Rs. 1,500 each for all the Harijans in Tamil Nad ; and

(*b*) whether it is a fact that the Government have issued orders that these houses should not be constructed on wet lands ?